"இனிமையான செல்லக் குழந்தைகளே ! பாபா உங்களுக்காக புதிய உலகமான சொர்க்கத்தை ஸ்தாபனை செய்வதற்காக வந்துள்ளார், ஆகவே இந்த நரகத்தின் மீது மனதை ஈடுபடுத்தாதீர்கள், இதை மறந்து கொண்டே செல்லுங்கள்"

கேள்வி: இரக்கமனமுள்ள பாபா குழந்தைகளாகிய உங்கள் மீது எந்த ரூபத்தில், என்ன இரக்கம் காட்டுகிறார்?

பதில்: நான் தந்தை ரூபத்தில் இனிமையான சாக்ரீன் (மிகவும் இனிப்பான பொருள்) ஆகி உலகத்தில் யாரும் கொடுக்க முடியாத அளவிற்கு அன்பைக் கொடுக்கின்றேன், என்று பாபா கூறுகின்றார். நான் உங்களை தூய்மையான அன்பு நிறைந்த உலகத்திற்கு எஜமானர்களாக்கி விடுகின்றேன். டீச்சராக ஆகி, நீங்கள் சொர்க்கத்தின் குலமகளாகி விடும் அளவிற்கான படிப்பை கற்பிக்கின்றேன். இது மனிதனிலிருந்து தேவதையாக ஆவதற்கான படிப்பாகும். இந்த ஞான ரத்தினங்கள் உங்களை உலகத்திற்கு எஜமானர்களாக ஆக்கி விடுகின்றன.

பாடல்: தாய் யார், தந்தை யார்......................

ஓம் சாந்தி! குழந்தைகளுக்கு ஓம் சாந்தி என்பதின் அர்த்தம் புரிய வைக்கப்படுகிறது. ஓம் என்பதின் அர்த்தம் - நான் ஆத்மா, ஆத்மாவாகி நான் நிராகார பரமாத்மாவின் குழந்தையாக இருக்கின்றேன். சரீரத்தின் தந்தை, யார் பிறவி கொடுத்தாரோ அவர் ஆவார். அவர் இருக்கவே இருக்கின்றார். அதிகத்திலும் அதிகமான கோடிக்கணக்கான ஆத்மாக்கள் தங்களுடைய நிராகார உலகத்தில் இருக்கின்றன. அங்கே எப்போதும் விகார மற்றவைகளாகத் தான் இருக்கின்றன, விகாரிகள் பரந்தாமத்தில் இருக்க முடியாது. முதலில், நான் ஆத்மா, என்னுடைய தந்தை பரமாத்மா, என்ற விஷயத்தை உறுதியாக்க வேண்டும். ஆத்மாவின் உறவு முறை (சம்மந்தம்) அனைத்தும் சகோதர-சகோதரர்களாவர். இந்த சரீரத்தின் தந்தையை லௌகீக தந்தை, என்று சொல்லப்படுகிறது. ஆத்மாவின் தந்தையை பரலௌகீக தந்தை, என்று சொல்லப்படுகிறது. அவர் அனைவருக்கும் ஒருவரே ஆவார். ஓ, இறை தந்தையே!, ஓ தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவரே!, இரக்கமனமுடையவரே!, என்று அழைக் கிறார்கள் அல்லவா. ஆத்மா தந்தையை அழைக்கிறது. ஆத்மா இந்த சரீரத்தோடு துக்கமாக இருக்கிறது. பிறகு சத்யுகத்தில் ஆத்மா சரீரத்தோடு சுகமாக இருக்கிறது, ஆகையினால் அதனுடைய பெயரே சுகதாமம், சொர்க்கமாகும். இது நரகமாக இருக்கிறது. துக்கத்தில் அனைவரும் நினைப்பார்கள்....... என்று பாடப்பட்டிருக்கிறது அல்லவா. தூய்மை யற்றவர் களை தூய்மையாக்குபவரை நினைவு செய்கிறார்கள். தூய்மையற்றவர்களை தூய்மை யாக்குபவர் மேலே பரந்தாமத்தில் இருப்பதாகப் புரிந்து கொள்கிறார்கள். கங்கையை தூய்மை யற்றவர்களை தூய்மையாக்கக் கூடியது, என்று சொல்ல முடியாது. கங்கையை இந்த கண்களின் மூலம் பார்க்கப்படுகிறது. நிராகார தந்தையை அல்லது ஆத்மாவைப் பார்க்க முடிவதில்லை. பரமபிதா பரமாத்மா உயிர் தானம் அளிக்கக் கூடிய வள்ளல், தெய்வீகப் பார்வையை வழங்கும் வள்ளல், அவரை ஓ, இறை தந்தையே! படைப்பவரே! என்று சொல்லப்படுகிறது. நல்லது, பிறகு தாய் எங்கிருந்து வந்தார்? தாய் இல்லாமல் தந்தை சிருஷ்டியை எப்படிப் படைப்பார்?

கண்டிப்பாக தாய் வேண்டும் அல்லவா? இறை தந்தை மனித சிருஷ்டியை படைப்பவர், அவர் அனைவருக்கும் தந்தையாக இருக் கின்றார். தந்தை இருக்கிறார் என்றால் தாயும் கண்டிப்பாக இருப்பார். "நான் நிராகாரமானவராக இருக்கின்றேன்" என்று பாபா வந்து புரிய வைக்கின்றார். நான் எப்போது வருவேனோ, திருமணம் செய்வேனோ அப்போது தான் குழந்தைகள் இருப்பார்கள். ஆனால் திருமணம் செய்ய வேண்டியதில்லை. திருமணம் செய்யாமல் குழந்தைகளைப் பெற வேண்டும். நான் குழந்தைகளை தத்தெடுக்கின்றேன். இப்போது யாருக்காவது மனைவி இல்லை, ஆனால் தன்னுடைய சொத்தை யாருக்காவது கொடுத்து விட்டுச் செல்ல விரும்புகிறபோது, தர்மத்தின் படி குழந்தையை உருவாக்குகிறார், தத்தெடுக்கிறார் என்றால், தாய்-தந்தை இரண்டுமாகி விடுகிறார் அல்லவா. ஆக எல்லையற்ற தந்தையும் கூட, நான் தந்தையாக இருக்கின்றேன், என்று கூறுகின்றார். நான் எப்படிப் படைப்பேன்? புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் அல்லவா? எனக்கு சரீரம் வேண்டும் அல்லவா, என்று பாபா அவரே வந்து புரிய வைக் கின்றார். ஆகவே இவருடைய (பிரம்மா) சரீரத்தை ஆதாரமாக எடுக்கின்றேன். நாங்கள் ஈஸ்வரனின் குழந்தை கள், என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அனைவரும் ஈஸ்வரனின் குழந்தைகள் தான், ஆனால் இந்த சமயத்தில் பாபா நேரடியாக வந்திருக்கின்றார். குழந்தை களாகிய உங்களை மடியில் தாங்குகிறார். நாம் பாபாவின் குழந்தைகளாகியிருக்கிறோம், என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர் கள். பாபா சொர்க்கத்தைப் படைப்பவராக இருக்கின்றார். சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆக்கு வதற்காக இராஜயோகம் கற்றுக் கொடுக்கின்றார். நான் நிராகார இறை தந்தை, என்று பாபா அவரே வந்து கூறுகின்றார். நிராகாரமானவரை மனித சிருஷ்டியினைப் படைப்பவர், என்று எப்படி சொல்ல முடியும்? ஆகவே குழந்தை களைத் தத்தெடுத்து அவர்களுக்குத் தான் வந்து புரிய வைக்கின்றார், "நான் சிவன் நிராகார மானவராக இருக்கின்றேன்". நீங்களும் கூட நிராகார ஆத்மாக்கள் தான். நீங்கள் கர்ப ஜெயிலில் வருகிறீர்கள், நான் கர்ப ஜெயிலில் வருவதில்லை. உங்களுக்கு, அரைக் கல்பம் கர்ப மாளிகை, அரைக் கல்பம் கர்ப ஜெயிலாகும், ஏனென்றால் அரைக்கல்பம் தூய்மையற்றவர்களாக, துக்கமுடையவர்களாக ஆக்குவதற்கு மாயை இராவணன் பாவம் செய்விக் கின்றான். சத்யுகத்தில் மாயை இருப்பதில்லை. 21 பிறவிகளுக்கு உங்களுக்கு நான் சொர்க்கத்தின் ஆஸ்தியைத் தருகின்றேன். சொர்க்கத்தைத் தான் புதிய உலகம், என்று சொல்லப்படுகிறது. கட்டிடம் கூட பழையதாகி விட்டால் பழையதை விட்டு விட்டு புதியதிற்குச் செல்கிறார்கள். இது கூட பழைய உலகமல்லவா? அது புதிய உலகம் கோல்டன் ஏஜ் (சத்யுகம்), தூய்மையான உலகமாகும். ஆகவே பாபா கூறுகின்றார் - செல்லக் குழந்தை களே, நான் உங்களுக்காக சொர்க்கத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கின்றேன், பிறகு நீங்கள் நரகத்தின் மீது மனதை ஏன் ஈடுபடுத்துகின்றீர்கள்? இப்பொழுது நரகத்தை மறந்து விடுங்கள். தந்தையாகிய என்னையும் சொர்க்கத்தையும் நினைவு செய்யுங்கள், பழைய உலகத்தை மறந்து கொண்டே செல்லுங்கள். இது எல்லையற்ற சன்னியாசமாகும். பழைய தேகம் உட்பட எதையெல்லாம் பார்க்கின்றீர்களோ, அவற்றிலிருந்தெல்லாம் பற்று தலை விடுங்கள். நாம் அனைத்தையும் ஈஸ்வரனுக்குக் கொடுக்கின்றோம், என்று புரிந்து கொள்ளுங் கள். இந்த சரீரம், பணம்-சொத்து, குழந்தைகள் போன்ற அனைத்தும் முடிய (அழியப்) போகின்ற வைகளாகும். இது அதே மிகப்பெரிய மகா பாரதப்போராகும், இதன் மூலம் தான் முக்தி-ஜீவன்

முக்தியின் நுழைவாயில் திறக்கப்பட வேண்டும். ஹரியின் நுழைவாயில், என்று சொல்கிறார் கள் அல்லவா? ஹரி என்று கிருஷ்ணருக்கு சொல்லப் படுகிறது, அவரது நுழைவாயில் வைகுண்டமாகும். வைகுண்டத்தின் நுழைவாயிலை பாபா வந்து திறக்கின்றார். அங்கே எந்த தூய்மையற்றவரும் செல்ல முடியாது. ஆகையினால் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மை யாக்குகின்றார், துக்கத்திலிருந்து விடுவிக்கின்றார். வேறு யாரும் விடுவிக்க முடியாது. துக்கத்தைப் போக்குபவர், சுகத்தை வழங்குபவர் ஒரு பாபா தான் ஆவார். நான் உங்களுக்கு இராஜயோகம் கற்றுத் தருகின்றேன், என்று பாபா கூறுகின்றார். சதாகாலத்திற்கும் சுகம் கொடுக்க வந்துள்ளேன். நான் உங்களுக்காக வைகுண்டத்தை கைகளில் கொண்டு வந்திருக்கி ன்றேன். நீங்கள் இராஜ யோகத்தை கற்றுக் கொண்டு மனிதனிலிருந்து தேவதையாக ஆகின்றீர்கள். முற்றிலும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள், என்று புத்தி கூட சொல்கிறது. இது பழைய உலகம், பிறகு புதிய தாக ஆகும், என்று புரிந்து கொள்ளுங்கள். சர்வ சக்திவான் ஒரேயொரு பாபா தான், அவர் தன்னுடைய சக்தியின் மூலம் சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆக்குகின்றார். ஒரே இராஜ்யம் இருக்க வேண்டும், சர்வ சக்திவானின் இராஜ்யம் வேண்டும், என்று விரும்பு கிறார்கள். அப்படியே சத்யுகம்-திரேதாவில் நிலையான, தொடர்ச்சியான, சுகம்-சாந்திமய தேவி- தேவதை களின் இராஜ்யம் இருந்தது, எந்த தடையும் இல்லாமல் இருந்தது. அதனை அத்வைத (ஒரு வழிப்படி நடக்கும்) இராஜ்யம், என்று சொல்லப் படுகிறது. துக்கமுடையவர்களாக ஆவதற்கு, வேறு தர்மமே இல்லை. இப்போது பாருங்கள் ஒரே கிறிஸ்துவர்கள் தான் இருக்கிறார்கள், இருந்தாலும் கூட அவர்களுக்குள் நிறைய சண்டை நடக்கிறது, ஏனென்றால் மாயையின் இராஜ்யமாக இருக்கிறது. சத்யுகத்தில் மாயை இருப்ப தில்லை. இப்போது சொல்கிறார்கள் - ஓ, இறை தந்தையே! இரக்கம் காட்டுங்கள். அனைவர் மீதும் இரக்கம் காட்டுவேன், என்று பாபா கூறுகின்றார். அனைத்து குழந்தைகளையும் பாவங் களிலிருந்து விடுவிக்கின்றேன், அதாவது தூய்மையற்ற உலகத்திலிருந்து விடுவிக்கின்றேன். ஆத்மாக் களாகிய உங்கள் அனைவரையும் நிராகார உலகத்திற்குக் கொண்டு செல்கின்றேன். மற்றபடி சரீரம் என்னவோ பஸ்மமாகி விடும். இயற்கை சீற்றங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. அறிகுறி களைக் கூட பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். கண்டிப்பாக பஞ்சம் ஏற்படும்.

இந்த மோசமான உலகத்திலிருந்து பற்றுதலை துண்டியுங்கள், என்று இப்போது பாபா கூறுகின்றார். எல்லையற்ற தந்தை சாக்ரீனாக (மிகவும் இனிமையானவராக) இருக்கின்றார். நான் உங்கள் மீது அன்பு செலுத்து கின்றேன், அதுபோல் வேறு யாரும் அன்பு செலுத்த முடியாது, என்று சொல்கின்றார். இப்போது உங்களை தூய்மையான உலகத்திற்கு எஜமானர் களாக ஆக்குகின்றேன். நீங்கள் இராஜ்யத்திற்காகப் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள். புத்தியில் குறிக்கோள் இருக்கிறது. எதுவரை ஒருவர் அமர்ந்து புரிய வைக்கவில்லையோ, அதுவரை புதியவர்கள் யாரும் புரிந்து கொள்ள முடியாது. மனிதனிலிருந்து தேவதையாக ஆக வேண்டும், என்று ஒரு வாரம் அமர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். ஆகையினால் தான் பாபாவை மந்திரவாதி, என்று சொல்கிறோம். ஞான ரத்தினங்களின் மூலம் மனிதர்களை தேவதைகளாக்கு கின்றேன். அவரை இரத்தின வியாபாரி, வியாபாரி, வழிப் பயணி என்றும் சொல்லப்படுகிறது. வந்து உங்களை சொர்க்கத் தின்

மகாராஜன்-மகாராணியாக ஆக்குகின்றார். வழிப்பயணி எவ்வளவு அழகானவராக இருக்கின்றார்! எந்த வேலைக்கும் உதவாதவர்களாக இருந்த உங்களை, இப்போது ஞானம் கற்பித்து சொர்க்கத்தின் குலமகளாக்குகின்றேன். நாம் சூரிய வம்சத்தைச் சார்ந்தவர்களாகவும், சந்திரவம்சத்தை சார்ந்தவர்களாவும் ஆவதற்காகப் படித்துக் கொண்டிருக்கின்றோம், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர் கள். பரமாத்மா கற்பிக்கின்றார். நீங்கள் இங்கே என்ன படிக்கின்றீர்கள்? மனிதனிலிருந்து தேவதையாக ஆவதற்கு படித்துக் கொண்டிருக் கிறோம், என்று சொல்வீர் கள், ஏனென்றால் இந்த அசுர குணமுடைய மனித சிருஷ்டி வினாசமாகப் போகின்றது. நான் குணமற்றவன், என்னிடத்தில் குணமேதும் இல்லை, என்றும் சொல்கிறார்கள். ஆக அதே இரக்கமனமுடைய தந்தை அமர்ந்து உங்களுக்கு கற்பிக்கின்றார். அனைத்து தர்மத்தைச் சேர்ந்தவர்களும் ஒரு நிராகாரமான தந்தையைத் தான் பரமாத்மா, என்று ஏற்பார்கள். மனிதர்கள் இறை தந்தை என்று சொல்கிறார்கள், ஆனால் அவர் யார், எங்கே வரு கின்றார், என்று தெரிந்திருக்கவில்லை. அவர் பழைய தூய்மையற்ற உலகத்தில் வருகின்றார், ஏனென்றால் தூய்மையான உலகத்தை ஸ்தாபனை செய்கின்றார், என்பதை இப்போது நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பழைய உலகத்தைப் புதியதாக்குகிறார். புதிய உலகத்தில் சுகமே சுகம் தான் இருக்கிறது. புதிய உலகத்தை ஸ்தாபனை செய்வதற்கு கல்ப-கல்பத்திற்கும் நான் வரத்தான் வேண்டும், என்று பாபா கூறுகின்றார். இரவிற்குப் பிறகு பகல், என்று புத்தி புரிந்து கொள்கிறது. பிறகு சக்கரத்தில் கலியுகம் வருகிறது. கலியுகத்திற்கு பிறகு சத்யுகம் கண்டிப்பாக இருக்கும் அல்லவா? குழந்தைகளாகிய உங்களை சுயதரிசன சக்கரதாரிகள், என்று சொல்லப்படுகிறது. "நான் எப்படி 84 பிறவிகள் எடுக்கின்றேன்", என்று ஆத்மா தெரிந்துள்ளது. எந்தவொரு மனிதனும் மனிதனுக்கு சத்கதி கொடுக்க முடியாது. நான் தான் வந்து புரிய வைக்கின்றேன். நான் உங்களை தூய்மையாக்குகின்றேன், யோக பலத்தின் மூலம் நீங்கள் உலகத்தின் மீது வெற்றி அடைகின்றீர்கள். பாபா சர்வசக்திவானாக இருக்கின்றார். பாபாவிடமிருந்து உங்களுக்கு எல்லை யற்ற ஆஸ்தி கிடைக்கிறது. ஆகாயம், பூமி, கடல் போன்ற அனைத்தும் உங்களு டையதாகி விடும். இங்கேயோ பாருங்கள் ஆகாயத்தில் கூட எல்லை இருக்கிறது, தண்ணீரில் கூட எல்லை வகுக்கப்பட்டிருக்கிறது அல்லவா? சொர்க்கம் என்பது வேறென்ன! சொர்க்கத்தை மறக்க முடியாது. மனிதர்கள் இறந்து விட்டால் சொர்க்கவாசி ஆகிவிட்டார், என்று சொல்கிறார்கள். ஆனால் சொர்க்கம் எங்கே இருக்கிறது? கண்டிப்பாக இது நரகம் தான் அல்லவா. இது நரகம் தான் ஆகும். மனிதர்கள் அனைவரும் துக்கமுடையவர்களாக இருக்கிறார்கள், அனைவரும் தூய்மையற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த இராஜ்யமே இராவணனுடையதாகும். அவனைத் தான் எரித்துக் கொண்டே இருக்கிறார்கள், ஆனால் எரிவதே இல்லை. இராவணனை 100 அடி நீளத்திற்கு பெரியதாக உருவாக்குகிறார்கள். மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறார் கள். நாளுக்கு-நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறார்கள், ஆனால் புரிந்து கொள்வதே இல்லை. இவை புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாகும்.

இங்கே பாருங்கள் முரளி நடந்து கொண்டிருக்கிறது, டேப் ரெக்கார்டரில் பதிவு செய்யப்படுகிறது, ஏனென்றால் கோபியர்கள் முரளி இல்லாமல் இருக்க முடியாது. ஆகவே இந்த ஏற்பாடு செய்யப் படுகிறது. முரளி இல்லாமல் துடிக்கிறார்கள், ஏனென்றால் இந்த முரளி வாழ்க்கையை வைரத் திற்குச்

சமமாக மாற்றக் கூடியதாகும். இங்கே பாபா கற்பிக் கின்றார், பிறகு இந்த முரளி லண்டன்-அமெரிக்கா வரை செல்கிறது. குழந்தைகள் முரளியைக் கேட்டு மிகுந்த குஷி அடைகிறார்கள். கோபியர்கள் முரளி இல்லாமல் இருக்க முடிவதில்லை, என்று பாடப் பட்டுள்ளது. இந்த ஞானத்தை இறை தந்தை தான் சொல் கின்றார். இவர் நம்முடைய எல்லை யற்ற தந்தை, இவரிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கின்றது, என்ற முக்கியமான விஷயத்தைப் புரிய வைக்க வேண்டும். என்னுடைய தந்தை பரமாத்மா, அவர் ஆத்மாக்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கிறார், என்று ஆத்மா கூறுகின்றது. நான் பரமாத்மா ஆத்மாக்களாகிய உங்களுக்கு கற்பிக்கின்றேன், என்று இப்படி வேறு யாரும் சொல்ல முடியாது. இப்படியும் யாரும் சொல்ல மாட்டார்கள், நான் பரமாத்மா, ஞானக்கடலாக இருக்கின்றேன் என்று. குழந்தை களாகிய உங்களுக்கு மிகவும் நல்ல விதத்தில் புரிய வைக்கப் படுகிறது, ஆனால் அனைவரது புத்தியும் ஒரே நிலையில் இருப்பதில்லை. சிலருடையது தமோபிரதான புத்தியாக இருக்கிறது, சிலருடையது சதோவாகவும், ரஜோவாகவும், தமோ வாகவும்...... இதில் டீச்சர் என்ன செய்வார்? படிப்பின் மீது முழு கவனம் கொடுக்கவில்லை, என்று தான் சொல்வார். இறைதந்தை ஞானக் கடலாக இருக்கின்றார். எப்படி டீச்சர் ஞானக் கடலாக இருக்கின்றாரோ, மாணவர் களுக்கு கற்பிக் கின்றாரோ, தனக்கு சமமாக மாற்று கின்றாரோ, அதுபோல் இந்த சிருஷ்டிச் சக்கரத்தின் ஞானம் இறை தந்தையிடம் தான் இருக்கிறது, வேறு யாரும் தெரிந்திருக்கவில்லை. பாபா தான் ஞானத்தை கற்றுக் கொடுத்து ஞானம் நிறைந்தவர்களாக மாற்றுகின்றார். பாபா ஞானக் கடல், அனைவரையும் விட உயர்ந்தவர். யாருடைய புகழ் உயர்ந்ததாக இருக்கிறதோ, அவருடைய இருப்பிடமும் உயர்ந்த தாகத் தான் இருக்கிறது. பிரம்மா-விஷ்ணு-சங்கர் சூட்சும வதனவாசி களாவர். மூன்றாவது நிலையில் மனிதர்கள் இருக்கிறார்கள். மனிதர்களில் கூட வரிசை இருக்கிறது. சத்யுகத்தில் மனிதர்களின் தரம் மிகவும் உயர்ந்ததாக இருக்கிறது. நீங்கள் கோல்டன் ஏஜிற்கு (சத்யுகம்) செல்கிறீர்கள். அயர்ன் ஏஜ் (கலியுகம்) முடிந்து விடும். கோல்டன் ஏஜ் (சத்யுகம்) இருந்தால் சில்வர் ஏஜ் (திரேதாயுகம்) இருக்காது, காப்பர் ஏஜ் (துவாபரயுகம்) இருந்தால் அயர்ன் ஏஜ் (கலியுகம்) இருக்காது. இந்த அனைத்து விஷயங்களையும் புத்தியில் வைக்க வேண்டும், ஆகையினால் தான் படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சத்யுகத்தில் மிகக் குறைந்த மனிதர்களே இருக்கிறார்கள். கலியுகத்திலோ அதிகத்திலும் அதிக மனிதர்கள் இருக் கிறார்கள். பாபா, வினாசம் எப்போது ஆகும்? என்று கேட்கிறார்கள். எப்போது நாடகம் முடிகிறதோ, அப்போது வினாசம் ஆகும், அனைவரும் சென்று விடுவார்கள். பாபா முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் வழிகாட்டியாவார். அவர் பரந்தாமத்தில் இருக்கின்றார். நீங்களும் கூட அங்கே இருப்பவர்கள் தான், இங்கே நடிப்பை நடிப்பதற்காக வந்துள்ளீர்கள். பாபா கூறுகின்றார்-- குழந்தைகளே, நீங்கள் மாயை மீது வெற்றி அடைய வேண்டும். இதில் இம்சை யின் விஷயம் ஏதும் இல்லை. சத்யுகத்தில் இம்சை நடப்பதில்லை. முழுமையாக விகாரமற்ற தேவி-தேவதைகள் தான் அங்கே இருக் கிறார்கள். நல்லது!

"இனிமையிலும் இனிமையான காணமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும்-தந்தையுமான பாப்தாதாவின் அன்பு-நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) புத்தியின் மூலம் எல்லையற்ற சன்னியாசம் செய்ய வேண்டும். பழைய தேகம் உட்பட இந்த கண்களின் மூலம் என்னவெல்லாம் தெரிகிறதோ, அவற்றிலிருந்து பற்றுதலை நீக்கி பாபா மற்றும் சொர்க்கத்தை நினைவு செய்ய வேண்டும்.

(2) படிப்பை நன்றாக தாரணை செய்து புத்தியை சதோபிரதானமாக்க வேண்டும். முரளி தான் படிப்பாகும். முரளியின் மீது மிக-மிக கவனம் கொடுக்க வேண்டும்.

வரதானம் : பாக்கியத்தின் புதுப் புது நினைவுகளின் மூலம் முயற்சியில் மகிழ்ச்சியின் அனுபவம் செய்யக் கூடிய மன ஆரோக்கியமானவர் ஆகுக.

பிராமண வாழ்க்கையில் கடைசி பிறவியின் காரணத்தினால் சரீரத்தில் எவ்வளவு தான் பலவீனமாக இருந்தாலும் அல்லது நோயாளியாக இருந்தாலும் அனைவரின் மனமும் ஆரோக்கியமாக இருக்கிறது. ஆர்வம்-உற்சாகத்தில் பறக்கக் கூடியதாக இருக்கிறது. சக்திசா-யான மனதின் அடையாளம் - விநாடியில் எங்கு விரும்புகிறீர்களோ அங்கு சென்றடைந்து விடும். இதற்கு சதா தனது பாக்கியத்தின் பாட்டு பாடி பறந்து கொண்டே இருங்கள். அமிர்த வேளையிலிருந்து பாக்கியத்தின் புதுப் புது விசயங்களை நினைவில் கொண்டு வாருங்கள். சில நேரம் பிராப்திகளின் நினைவை எதிரில் வையுங்கள், சில நேரம். அப்பொழுது முயற்சியில் மகிழ்ச்சி வந்து விடும். சோம்பல் (போர்) ஏற்படாது, புதுமை அனுபவம் செய்வீர்கள்.

சுலோகன்: முன் பின் யோசித்து, புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியம் செய்தால் வெற்றி பிராப்தியாக கிடைத்துக் கொண்டே இருக்கும்.